2019/2020

ரெடிங் தமிழ் கல்விக்கூடம்

Reading Tamil School

# வளர் தமிழ் 6

## பயிற்சி 6

பெயர் ____________________________________________

www.readingtamilschool.co.uk

admin@readingtamilschool.co.uk

1. **பேச்சுப் பயிற்சி**

பின்வரும் தலைப்புத் தொடர்பாக 2 மணித்துளிகள் தொடர்ச்சியாகப் பேசவும்.

*‘ நட்பு ’*

2. **வாசித்தல்**

நாம் எப்பொழுதும் ஒருவருடன் அன்புடனும் மதிப்புடனும் பழகக் கற்றுக்கொள்ள வேண்டும். எமது உறவுகளுடன் மட்டுமே அன்புடன் பழகாது எமது அயலவரோடும் அன்புடனும் மதிப்புடனும் பழகுதல் வேண்டும். அயலவர் என்றும் எம் அருகில் இருப்பவர். அவர்கள் இனத்தால், மொழியால் வேறுபட்டாலும் அவர்கள் என்றும் எம் அயலவரே. எங்களுக்கு ஏதும் இடர் என்றால் எங்கள் உறவுகள் வருவதற்குள் உடனே வரக்கூடியவர்கள் எமது அயலவரே. “தூரத்துத் தண்ணீர் ஆபத்துக்குதவாது” என்று எம் முன்னோர் அழகாகப் பழமொழி மூலம் சொல்லி வைத்துள்ளனர். இப்போது எமது உறவுகள் இங்கொன்றும் அங்கொன்றுமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் அயலவரே எங்களுக்கு என்றும் துணை. எனவே அயலவரோடு அன்புடன் பழகுவோம். அவர்களது இன்பதுன்பங்களில் பங்கு கொள்வோம்.

3. **பாடநூற் சொற்கள்**

இந்துமாவாரி - Indian Ocean

இரண்டகர்கள் - Traitors

மேலாண்மை - Management

குடியுரிமை - Citizenship

வாழ்வுரிமை - Right to Live

கைக்கூலி - Stooge

பரப்பளவு - Area

காப்பு அரண் – Fortified castle

விழுப்புண் - Scars from battle

மொழியுரிமை - Right for Language

அடிமை - Slave

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

**4. பின்வரும் தலைப்புக்குப் பொருத்தமாக 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதவும்.**

**எமது பெற்றோர்**

**திட்டமிடல்**

- உமது பெற்றோர் பற்றிய அறிமுகம். (முன்னுரை)
- பெற்றோர் உம்மிடம் காட்டும் அக்கறை. (கருத்து)
- பெற்றோருக்கு நீர் செய்யும் உதவிகள். (கருத்து)
- எதிர்காலத்தில் நீர் அவர்களுக்குச் செய்யவேண்டியவை. (கருத்து)
- முடிவுரை

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6

5. **பொருத்தமான விடையைக் தேர்வு செய்வோம்.**

- தமிழில் உள்ள நெட்டெழுத்துகளின் எண்ணிக்கை ________________

  5 4 7 12

- வீடு, ஊஞ்சல், பொம்மை என்பன ________________.

  உயர்திணை வினைச்சொல்

  அஃறினை பல்திணை

- மனுநீதிகண்ட சோழனுக்கு நிகராகக் குறிப்பிடப்படும் தமிழ் மன்னன் ________________.

  எல்லாளன் சிபி

  சங்கிலியன் சேரலாதன்

- நீர், நீ, நீங்கள் என்பன____________________.

  தன்மை முன்னிலை படர்க்கை பன்மை

- பழமொழி: மயிலே ____________________ என்றால் இறகு போடாது.

  குயிலே மயிலே கிளியே மானே

- சொல்லியத்தில் கருத்து முடியும் இடம்____________________.

  எழுவாய் அடைமொழி

  செயப்படுபொருள் பயனிலை

- மூட ஆமை என்பது ________________.

  ஊனமுள்ள ஆமை அறிவுள்ள ஆமை

  அறிவற்ற ஆமை நன்றியுள்ள ஆமை

- அன்பு, சதுரம், உறைப்பு, வெண்மை ________________.

  குணப்பெயர் இடப்பெயர்

  காலப்பெயர் சினைப்பெயர்

- வேளாண்மை என்ற சொல் குறித்து நிற்பது ____________________.

  கடற்றொழில் உழவுத்தொழில்

  ஆசிரியர் மருத்துவர்

- போர்த்துக்கேயரினால் யாழ்ப்பாண அரசு கைப்பற்றப்பட்ட ஆண்டு

  1959 1619 1719 1659

- ஒரு செயல் நடந்து முடிந்ததை குறிக்கும் காலம் ________________.

  நிகழ்காலம் இறந்தகாலம் எதிர்காலம் வருங்காலம்

- அக்கா வீட்டுவேலைகளை ____________________ என்று செய்து முடித்தார்.

  படபட கலகல நறநற மளமள

- நாட்டார் என்பது யாரைக் குறிக்கும்?

  உழவரை மன்னனை

  நாட்டுப்புற மக்களை ஆசிரியரை

- 19ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் வன்னியை ஆண்ட தமிழ் மன்னன்

  பண்டாரவன்னியன் கயிலைவன்னியன்

  எல்லாளன் சங்கிலியன்

- உயர்திணைக்கு உரிய பால்கள்

  இரண்டு மூன்று நான்கு ஐந்து

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர்தமிழ் 6

6. **பாட வினாக்களுக்கு விடை தருக.**

- மூட ஆமை என்ற பாடத்தில் கொக்குகளும் ஆமையும் ஏன் வருந்தின?

- எல்லாளனுடன் போர் தொடுக்க வேண்டாம் என துட்டகெமுனுவைத் தடுத்தவன் யார்?

- தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகள் எவை?

- உயிரைவிட மானமே பெரிதென உயிர் நீத்த மன்னன் யார்?

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6